

கழகத் தலைவர் மு.க.ஸ்டாலின் அவர்களை நேற்று (24,09,2026) காலை, சென்னை, அண்ணா அறிவாலயத்தில் உள்ள கழக அலுவலகத்தில் சந்தித்து தி.மு.க. கலை இலக்கிய பகுத்தறிவு பேரவை மாநில துணை தலைவர் போஸ் வெங்கட் அவர்கள் ஏற்பாட்டில் தர்சினி கலைகூட நிர்வாகி தர்மலிங்கம் அவர்கள், தனது “தர்சினி கலை கூடம்” ஏற்பாட்டில், முத்தமிழறிஞர் கலைஞர் நூற்றாண்டையொட்டி தமிழ்நாடு முழுவதும் இருந்து ஆயிரக்கணக்கான ஓவியர்கள் வரைந்த கலைஞர் ஓவியங்களில் இருந்து தேர்ந்தெடுக்கப்பட்ட முத்தமிழறிஞர் கலைஞர் அவர்களின் நூறு சிறந்த ஓவியங்களை தொகுத்து “கலைஞர் கண்ட கலைஞர்” என்ற தலைப்பிலான ஓவிய தொகுப்பினை வழங்கினார். அதுபோது, கழகப் பொதுச்செயலாளர் துரைமுருகன், செய்தி தொடர்பு குழு தலைவர் டி.கே.எஸ்.இளங்கோவன், தலைமை நிலைய செயலாளர்கள் பூச்சி முருகன், துறைமுகம் காஜா ஆகியோர் உடனிருந்தனர்

### வல்லூர் எம்.எஸ்.கே.ரமேஷ் ராஜ் தலைமையில் கழக வேட்பாளர் ஐ.பரந்தாமனை ஆதரித்து

# அச்சரப்பாக்கம் வடக்கு ஒன்றியத்தில் ஆர்.எஸ்.பாரதி வாக்கு சேகரித்தார்!

திருவள்ளூர், செப். 25:

மதுராந்தகம் (தனி) சட்டமன்றத் தொகுதி இடைத் தேர்தலில் தி.மு.க. சார்பில் போட்டியிடும் கழக வேட்பாளர் ஐ. பரந்தாமன் அவர்களுக்கு ஆதரவாக, திருவள்ளூர் கிழக்கு மாவட்டத்திற்கு ஒதுக்கப்பட்டுள்ள அச்சரப்பாக்கம் வடக்கு ஒன்றியத்தில் தீவிர தேர்தல் பிரச்சாரம் நடைபெற்றது.

திருவள்ளூர் கிழக்கு மாவட்டக் கழகச் செயலாளர் வல்லூர் எம்.எஸ்.கே. ரமேஷ் ராஜ் தலைமையில் நடைபெற்ற வாக்கு சேகரிப்பில், கழக அமைப்புச் செயலாளர் ஆர்.எஸ். பாரதி கலந்து கொண்டு பொதுமக்கள் மற்றும் வாக்காளர்களை நேரில் சந்தித்து வாக்கு சேகரித்தார்.

அச்சரப்பாக்கம் வடக்கு ஒன்றியத்திற்குட்பட்ட பாப்பநல்லூர், திட்டாளம், கோழிளாம், தண்டரை புதுச்சத்திரம் உள்ளிட்ட ஊராட்சிகளில் வீதி வீதியாகச் சென்று பொதுமக்களை சந்தித்த கழக நிர்வாகிகள், திராவிட முன்னேற்றக் கழக ஆட்சியில் செயல்படுத்தப்பட்ட பல்வேறு மக்கள் நலத்திட்டங்கள் மற்றும் சாதனைகளை எடுத்துரைத்து, கழக வேட்பாளர் ஐ.பரந்தாமனுக்கு உதயசூரியன் சின்னத்தில் வாக்களிக்குமாறு கேட்டுக்கொண்டனர்.

அப்போது பேசிய கழக அமைப்புச் செயலாளர் ஆர்.எஸ். பாரதி, தி.மு.க. ஆட்சிக் காலத்தில் செயல்படுத்தப்பட்ட மக்கள் நலத் திட்டங்கள், சமூகநீதி நடவடிக்கைகள் மற்றும் பொது மக்களுக்கான பல்வேறு நலத்திட்டங்கள் குறித்து விளக்கிப் பேசினார்.

இந்த வாக்கு சேகரிப்புப் பணியில் நாடாளுமன்ற உறுப்பினர்கள் இரா. கிரிராஜன், க. செல்வம், ஒன்றியச் செயலாளர் தம்பு மற்றும் நிர்வாகிகள் மு.பகலவன், எம்.எல்.ரவி, மு.கதிரவன், எஸ்.ரமேஷ், பா.செ.குணசேகரன், பி.வெங்கடாஜலபதி, கே.ஜி.பாஸ்கர் சுந்தரம், வெ.அன்புவாணன், ஜி. ஸ்டாலின், ஏ.கே.சுரேஷ், டி.கே.சந்திரசேகர், ஆ.சக்தியவேலு, நா.பரிமளம், மு. மணிபாலன், ஆ.ராஜா, ந. செல்வசேகரன், ஞாயிறு வே.ஆனந்த் குமார், மு.முரளிதரன், ஜான் பொன்னுசாமி, ஏ.ஆர்.டி.உதயசூரியன், ஜி.ரவிக்குமார், அபிராமி குமரவேல், க.சு.தமிழ் உதயன் உள்ளிட்ட ஏராளமான கழக நிர்வாகிகள், தொண்டர்கள் கலந்து கொண்டு தேர்தல் பணியில் ஈடுபட்டனர்.

### திருவள்ளூர் அருகே பல்லி விழுந்த காலை உணவை உட்கொண்ட 40 மாணவர்கள் வாந்தி மயக்கம் – மருத்துவமனையில் சிகிச்சை!

# பள்ளிக் குழந்தைகளின் உயிருடன் விளையாடும் த.வெ.க. அரசு!

### தரமான உணவு வழங்கப்படுகிறதா? கண்காணிப்பு அதிகாரிகள் எங்கே?





திருவள்ளூர், செப். 25:

திருவள்ளூர் மாவட்டம், கடம்பத்தூர் ஒன்றியம், கொட்டையூர் ஊராட்சியில் உள்ள அரசு நடுநிலைப் பள்ளியில் மாணவ-மாணவிகளுக்கு வழங்கப்பட்ட காலை உணவில் பல்லி விழுந்ததாக எழுந்துள்ள புகார் பெரும் அதிர்ச்சியை ஏற்படுத்தியுள்ளது.

இந்த உணவை உட்கொண்ட 40 மாணவ-மாணவிகள் 108 ஆம்புலன்ஸ் வாகனத்தில் அழைத்துச் செல்லப்பட்டு திருவள்ளூர் அரசு மருத்துவமனையில் சிகிச்சை மேற்கொண்டு வருகின்றனர்

இச்சம்பவம் மாணவர்களின் பெற்றோர்கள் மத்தியில் கடும் அச்சத்தையும் அதிருப்தியையும் ஏற்படுத்தியுள்ளது.

பள்ளிக் குழந்தைகளுக்கு வழங்கப்படும் உணவு பாதுகாப்பானதாகவும், சுகாதாரமானதாகவும் இருப்பதை உறுதி செய்ய வேண்டியது அரசின் முக்கியப் பொறுப்பாகும். ஆனால், மாணவர்களுக்கு வழங்கப்பட்ட காலை உணவில் பல்லி விழுந்ததாக புகார் எழும் அளவுக்கு கண்காணிப்பு எப்படி இருந்தது? கண்காணிப்பு அதிகாரிகள் என்ன செய்து கொண்டிருந்தனர்? என்ற கேள்விகள் எழுந்துள்ளன.

அரசுப் பள்ளி மாணவர்களுக்கான காலை உணவுத் திட்டம் செப்டம்பர் 22ஆம் தேதி விரிவுபடுத்தப்பட்டு, ‘காமராஜர் காலை உணவுத் திட்டம்’ என்ற பெயரில் ரீல்ஸ் முதலமைச்சர் தொடங்கி வைத்தார் நிலையில், திட்டம் தொடங்கிய சில நாட்களிலேயே உணவின் தரம் மற்றும் சுகாதாரம் குறித்து இத்தகைய புகார் எழுந்திருப்பது பெற்றோர்கள் மத்தியில் கவலையை ஏற்படுத்தியுள்ளது.

குழந்தைகளுக்கு வழங்கப்படும் உணவு தரமானதா, சுகாதாரமானதா, பாதுகாப்பானதா என்பதை உறுதி செய்வதில் த.வெ.க. அரசு ஏன் கோட்டை விட்டது? என்று பெற்றோர்கள் கேள்வி எழுப்புகின்றனர்.

குழந்தைகளுக்கு வழங்கப்படும் உணவின் தரத்தைக் கூட முறையாக உறுதி செய்ய முடியாத நிலையில், விளம்பரங்களிலும் விழாக்களிலும் திட்டங்களைப் பெருமைப்படுத்துவதால் மட்டும் என்ன பயன்? என்ற கேள்வி பெற்றோர்கள் மத்தியில் எழுந்துள்ளது.

இந்தப் புகார் தொடர்பாக முழுமையான விசாரணை நடத்தி, உணவு தயாரிக்கப்பட்ட இடம் முதல் மாணவர்களுக்கு வழங்கப்பட்ட வரையிலான அனைத்து நிலைகளிலும் உரிய ஆய்வு மேற்கொள்ள வேண்டும். விசாரணையில் தவறு உறுதி செய்யப்பட்டால், அதற்குப் பொறுப்பானவர்கள் மீது கடும் நடவடிக்கை எடுக்க வேண்டும்.

பள்ளிக் குழந்தைகளின் உணவு விஷயத்தில் அலட்சியத்திற்கோ, அதிகாரிகளின் மெத்தனத்திற்கோ இடமளிக்காமல், த.வெ.க. அரசு இனியாவது விழித்துக்கொண்டு செயல்படுமா? என்பதே பெற்றோர்கள் மற்றும் பொதுமக்களின் கேள்வியாக உள்ளது.



மதுராந்தகம் சட்டமன்றத் தொகுதி இடைத்தேர்தலில் கழக வேட்பாளர் இ.பரந்தாமனை ஆதரித்து பெருநகர சென்னை மாநகராட்சி மேயர் பிரியா ராஜன் தலைமையில், கழக அமைப்பு துணைச் செயலாளர் தாயகம் கவி, திரு.வி.க. நகர் வடக்கு பகுதி கழக செயலாளர் செ. தமிழவேந்தன் ஆகியோர் முன்னிலையில் வையாவூர் பாகம் 34 வது பாகம் பகுதியில் வீடு வீடாக சென்று உதயசூரியன் சின்னத்திற்கு வாக்கு சேகரித்தனர். இதில் வட்டக் கழக செயலாளர்கள் எஸ். புஷ்பராஜ், எம்.ஏ. டீக்கா, எம்.இசட் அபோய், ஜி.கிருஷ்ணகுமார், பரிமளா, சுரேஷ் பாபு, ஒன்றிய அவைத் தலைவர் ஆறுமுகம், 74 வது வட்ட அவைத் தலைவர் டி.வெங்கடேசன் மற்றும் கழக நிர்வாகிகள் ஆகியோர் உடன் சென்று வாக்கு சேகரித்தனர்.

### மதுராந்தகம் இடைத்தேர்தல்: கழக வேட்பாளர் இ.பரந்தாமனை ஆதரித்து

# கழக அமைப்புச் செயலாளர் ஆர்.எஸ்.பாரதி பொதுமக்களிடம் வாக்குச் சேகரித்தார்!

### வழக்கறிஞர் இரா.கிரிராஜன் எம்.பி. – முன்னணியினர் பங்கேற்பு!



சென்னை, செப். 25-

மதுராந்தகம் சட்டமன்றத் தொகுதி இடைத்தேர்தல் கழக வேட்பாளரும் கழகச்சட்டத்துறை இணைச் செயலாளருமான வழக்கறிஞர் இ.பரந்தாமனை ஆதரித்து கழக அமைப்புச் செயலாளரும் முன்னாள் நாடாளுமன்ற மேலவை உறுப்பிருமான ஆர்.எஸ். பாரதி அச்சிறுபாக்கம் வடக்கு ஒன்றியத்திற்கு உட்பட்ட தண்டரைபுதுச்சேரி ஊராட்சியில் பொதுமக்களிடம் வாக்குச் சேகரித்தார்.

காஞ்சிபுரம் தெற்கு மாவட்டச் செயலாளர் க.சுந்தர் அவர்களின் ஆலோசனையின்படி நடந்த இவ் வாக்குச் சேகரிப்பு நிகழ்ச்சியில் நாடாளுமன்ற மேலவை உறுப்பினர் இரா. கிரிராஜன், கழகச் சட்டத் துறை இணைச் செயலாளர் சூரியா வெற்றிகொண்டான், செய்யூர் முன்னாள் சட்டமன்ற உறுப்பினர் ஆர்.டி.அரசு, மாநில இளைஞர் அணி துணைச் செயலாளர் அப்துல் மாலிக், அச்சிறுபாக்கம் வடக்கு ஒன்றியச் செயலாளர் வீ.தம்பு மற்றும் அவ்வூராட்சி கிளைச் செயலாளர், கழக நிர்வாகிகள் உடனிருந்தனர்.

### கவுண்டம்பாளையம், குண்டுபாளையம், சுப்பையா நகர் பகுதியில்

# அடிப்படைப் பிரச்சினைகளைத் தீர்க்க தி.மு.க. வேட்பாளரை ஆதரியுங்கள்!

### பரப்புரையில் புதுச்சேரி தி.மு.க. அமைப்பாளர் இரா.சிவா வேண்டுகோள்!



புதுச்சேரி, செப். 25-

புதுச்சேரி தட்டாஞ்சாவடி தொகுதி இடைத்தேர்தலில் தி.மு.க. சார்பில் போட்டியிடும் சேதுசெல்வத்தை ஆதரித்து தட்டாஞ்சாவடி தொகுதிக்கு உட்பட்ட கொட்டுப்பாளையம், புதுப்பேட், சுப்பையா நகர், குண்டுபாளையம் பகுதிகளில் தி.மு.க. தேர்தல் பொறுப்பாளர் எஸ். ஜெகத்ரட்சகன் எம்.பி., துணைப் பொதுச் செயலாளர் க.பொன்முடி, மாநில அமைப்பாளர் இரா.சிவா ஆகியோர் தலைமையில் நேற்று முன்தினம் மாலை தி.மு.க. நிர்வாகிகள் வீடு, வீடாகச் சென்று உதயசூரியன் சின்னத்திற்கு வாக்கு சேகரித்தனர்.

தொடர்ந்து நேற்று காலை கவுண்டம்பாளையம் பகுதியில் தி.மு.க. மாநில அமைப்பாளர் இரா. சிவா, விழுப்புரம் மத்திய மாவட்டச் செயலாளர் டாக்டர் இலட்சுமணன் எம்.எல்.ஏ., ஆகியோர் தலைமையில் தி.மு.க. நிர்வாகிகள் மற்றும் கூட்டணி கட்சித் தலைவர்கள் தி.மு.க. வேட்பாளர் சேதுசெல்வத்தை ஆதரித்து பிரச்சாரம் செய்தனர்.

அப்போது வாக்காளர்களிடம் பேசிய தி.மு.க. அமைப்பாளர் இரா.சிவா, கவுண்டம்பாளையம், கண்டுபாளையம், சுப்பையா நகர் பகுதியில் வசிக்கும் மக்கள் தெளிவான சிந்தனை உள்ளவர்கள். தட்டாஞ்சாவடி தொகுதியில் யார் ஜெயித்தால் தொகுதி மக்களின் அடிப்படை பிரச்சினைகள் தீர்க்கப்படும் என்பதை உணர்ந்தவர்கள். இப்பகுதி மக்களின் எழுச்சி மிகு வரவேற்பை பார்த்தாலே தெரிகிறது நிச்சயம் தி.மு.க. வேட்பாளருக்கு முழு ஆதரவு அளிப்பார்கள் என்று. மக்கள் போராளியான தி.மு.க. வேட்பாளர் சேதுசெல்வம் வெற்றி பெற்றால், பக்கத்து தொகுதிக்கு சென்று ரேஷன் பொருள் வாங்கும் அவலத்தைப் போக்கி கவுண்டம்பாளையம் பகுதியில் ரேஷன் கடை அமைத்து மக்களின் சிரமத்தை போக்குவார். பயன்பாட்டிற்கு உகந்ததாக இல்லாமல் உள்ள அங்கன்வாடி மையத்தை பயன்பாட்டிற்கு கொண்டு வருவார். சுகாதாரமான குடிநீர் கிடைக்க நடவடிக்கை எடுப்பார். சரியான கட்டமைப்புடன் கூடிய கழிவுநீர் வாய்க்கால், குண்டும், குழியுமாக உள்ள சாலையை சீரமைத்தல், மகளிர் சுயஉதவிக் குழுக்களின் வாழ்வாதாரத்தை மேம்படுத்திட சரியான வழிகாட்டுதலுடன் கூடிய கடன் வசதி உள்ளிட்ட மக்களின் அடிப்படை தேவைகளை பூர்த்தி செய்வார். ஆகவே அவருக்கு உதயசூரியன் சின்னத்தில் வாக்களித்து வெற்றி பெற செய்ய வேண்டும்.

இவ்வாறு அவர் பேசினார்.

வாக்கு சேகரிப்பின் போது, வானூர் சட்டமன்ற உறுப்பினர் கௌதம் திராவிடமணி, கண்டமங்கலம் சேர்மன் வாசு, தி.மு.க. பொதுக்குழு உறுப்பினர் கோபாலகிருஷ்ணன், தொகுதி செயலாளர் சீத்தாராமன், சுற்றுச்சூழல் அணி அமைப்பாளர் முகிலன், சுந்தர் உள்ளிட்ட பலரும் உடனிருந்தனர்.

### மதுராந்தகம், தாராபுரம் சட்டமன்றத் தொகுதி இடைத்தேர்தல்

# தி.மு.க. தலைமையிலான கூட்டணிக்கு பல்வேறு இயக்கங்கள், சங்கங்கள் ஆதரவு!

சென்னை, செப். 25-

நடைபெறவிருக்கும் மதுராந்தகம், தாராபுரம் ஆகிய சட்டமன்ற தொகுதிகளுக்கான இடைத் தேர்தலில் தி.மு.க. தலைமையிலான மதச்சார்பற்ற முற்போக்குக் கூட்டணிக்கு, அ.சு.பவுத்தன் அவர்களை நிறுவனத் தலைவராக கொண்ட ஆதித்தமிழர் சனநாயக பேரவை; ஜி. எஸ்.இக்பால் அவர்களை தலைவராக கொண்ட தமிழக புரட்சி கழகம்; ரெ. சௌந்தரராஜ் நாயுடு அவர்களை தலைவராக கொண்ட “தமிழ்நாடு நாயுடு மகாஜன சங்கம்” ஆகிய இயக்கங்கள், சங்கங்கள் மதுராந்தகம் மற்றும் தாராபுரம் ஆகிய சட்டமன்றத் தொகுதிகளில் முழு ஆதரவு அளிப்பதாகவும்; இத்தொகுதிகளில் அறிவிக்கப்பட்டுள்ள கழக வேட்பாளர்களின் வெற்றிக்கு முழுமையாக பாடுபடுவதாக தெரிவித்துள்ளனர்.





மதுராந்தகம் சட்டமன்றத் தொகுதி இடைத்தேர்தலில் கழக வேட்பாளர் இ.பரந்தாமன் மதுராந்தகம் வடக்கு ஒன்றியத்தில் சென்னை கிழக்கு மாவட்டத்திற்கு ஒதுக்கப்பட்டுள்ள வையாவூர், சூரை, அண்டவாக்கம், புதுப்பட்டு, குன்னங்குளத்தூர் ஆகிய ஊராட்சிகளில் உள்ள 7, 9, 33, 34, 35, 36, 37, 38, 57, 58 ஆகிய பாகங்களில் வாக்காளர்களை நேரில் சந்தித்து வாக்கு சேகரிக்கும் வருகை குறித்து புழுதிவாக்கம் கூட்டு ரோடு அருகில் உள்ள சென்னை கிழக்கு மாவட்ட தேர்தல் பணிமனையில் காஞ்சிபுரம் வடக்கு மாவட்ட செயலாளர் தா.மோ.அன்பரசன், காஞ்சிபுரம் தெற்கு மாவட்ட செயலாளர் க.சுந்தர், மதுராந்தகம் வடக்கு ஒன்றிய செயலாளர் சத்திய சாய் நாதன் ஆகியோர் முன்னிலையில் நடைபெற்ற ஆலோசனைக் கூட்டத்தில் சென்னை கிழக்கு மாவட்ட கழகச் செயலாளர் பி.கே.சேகர் பாபு ஆலோசனை வழங்கினார். இக்கூட்டத்தில் மேயர் பிரியா ராஜன்,ஜோசப் சாமுவேல், கே.எஸ்.ரவிச்சந்திரன், பி.கே.மூர்த்தி, பகுதி கழகச் செயலாளர்கள் சொ.வேலு,வி. சுதாகர்,கூ.பீ.ஜெயின், டிஎஸ்பி ராஜகோபால், எம்.டி.ஆர். நாகராஜ்,செ.தமிழ்வேந்தன், எஸ் ராஜசேகர்,எஸ் முரளி, மற்றும் கழக நிர்வாகிகள் செயல்வீரர்கள் முன்னோடிகள் கலந்து கொண்டு சிறப்பித்தனர்.